பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
13 10 2024 6 45
ஞாயிற்றுக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. பிரதமரின் கதிசக்தி தேசியப் பெருந்திட்டம், சரக்குப் போக்குவரத்திற்கான செலவுகளை வெகுவாக குறைத்துள்ளது என்று மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

2. கேலோ இந்தியா போட்டிகள் விளையாட்டு வீரர்களின் திறனை மேம்படுத்தியுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

3. பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அடுத்த 5 நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

பிரதமரின் கதிசக்தி தேசியப் பெருந்திட்டம், சரக்குப் போக்குவரத்திற்கான செலவுகளை குறைப்பதுடன் சிறப்பான சேவைகளை வழங்க வகை செய்துள்ளதாக மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

உள்கட்டமைப்பு திட்டங்களை செயல்படுத்துவதில் பிரதமரின் கதிசக்தி திட்டம் சிறந்த முன்னுதாரணமாக உள்ளது என்று கூறினார்.

பல்வேறு அமைச்சகங்கள் மற்றும் மாநிலங்களில் இருந்து பெறப்படும் தரவுகளை ஒருங்கிணைப்பதன் மூலம் திறன்வாய்ந்த வெளிப்படையான அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளதாக திரு. பியூஷ் கோயல் தெரிவித்தார்.

<<<<>>>>

ஐ.நா. சபையில் நடைபெறும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான சர்வதேச அமைப்பின் 149வது கூட்டத்தில் மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தலைமையிலான நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழு பங்கேற்கிறது.

இந்த கூட்டத்தொடர் இன்று தொடங்கி இம்மாதம் 17ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

இதில் அமைதி மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான ‘அறிவியல் பயன்பாடு, தொழில்நுட்பம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள்’ என்ற கருப்பொருளில் திரு. ஓம் பிர்லா உரையாற்றுகிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிர்வாகக் கவுன்சில் கூட்டத்திலும் அவர் பங்கேற்கிறார்.

பின்னர் அங்குள்ள இந்திய வம்சாவளியினருடன் அவர் கலந்துரையாடுகிறார்.

இந்தியா சார்பில் மாநிலங்களவை துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஷ் சிங், நாடாளுமன்ற இரு அவைகளின் தலைமைச் செயலாளர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கின்றனர்.

இந்தக் கூட்டத்தில் சீனா, இந்தியா, இந்தோனேஷியா உள்ளிட்ட நாடுகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொள்கின்றனர்.

<<<<>>>>

ஆர்.எஸ்.எஸ். அமைப்பு தொடங்கப்பட்டு 100வது ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ளதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனைப் பதிவு செய்துள்ள அவர், இந்த வரலாற்றுச் சாதனைக்கு உதவிய தன்னார்வலர்களுக்கு பாராட்டு தெரிவித்தார்.

நாட்டின் மீதான அர்ப்பணிப்பு உணர்வு மற்றும் மன உறுதி எதிர்கால தலைமுறையினருக்கு ஒரு வழிகாட்டியாக திகழும் என்று குறிப்பிட்டுள்ளார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான புதிய சக்தியை இந்த அர்ப்பணிப்பு உணர்வு வழங்கும் என்று பிரதமர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

கேலோ இந்தியா போட்டிகள் நாட்டில் உள்ள விளையாட்டு வீரர்களின் திறனை மேம்படுத்தியுள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், இதனைத் தெரிவித்தார்.

<<<<>>>>

பழங்குடியின மக்களின் மேம்பாட்டிற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

சிவகங்கையில் செய்தியாளர்களிடம் பேசிய ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு. மதிவேந்தன், பழங்குடியின மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

இதற்கென சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அவர்களுக்கு குடியிருப்பு வசதிகள், சமுதாய கூடங்கள் ஆகியவை சீரமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

பணிகளை விரைந்து முடிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அமைச்சர் உறுதியளித்தார்.

<<<<>>>>

திருவள்ளூர் மாவட்டம் கவரைப்பேட்டை ரயில் விபத்து காரணமாக தடம்புரண்ட ரயில் பெட்டிகளை அகற்றும் பணிகள் மற்றும் ரயில் பாதை சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வந்தது.

தற்போது சீரமைப்புப் பணிகள் முடிவடைந்து மீண்டும் ரயில் போக்குவரத்து சேவை தொடங்கியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

மத்திய கிழக்கு அரபிக் கடல் பகுதியில் நிலைகொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி, மேற்கு – வடமேற்கு திசையில் நகர்ந்து, மத்திய அரபிக் கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக அடுத்த 5 நாட்களுக்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இன்று நீலகிரி முதல் தேனி வரையிலான மேற்குத் தொடர்ச்சி மாவட்டங்கள், மதுரை, புதுக்கோட்டை, சிவகங்கை உள்ளிட்ட தென் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் 2 நாட்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், நகரின் ஒரு சில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

*<u>இருவரிச் செய்திகள்</u>*

சீனாவின் பொருளாதார நிலையை சீரமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அந்நாட்டு நிதியமைச்சர் திரு. **Lan Foan** தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

இந்த ஆண்டு பிரேசிலில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீ காரணமாக இதுவரை 22 மில்லியன் ஹெக்டேர் பரப்பளவிலான வனங்கள் சேதமடைந்துள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

**<<<<>>>>**

மணிப்பூரில் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 350ஆக அதிகரித்துள்ளது.

**<<<<>>>>**

இந்தியா, ஆஸ்திரேலியா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளைச் சேர்ந்த கடற்படையினர் பங்கேற்கும் பாதுகாப்பு ஒத்திகை விசாகப்பட்டிணத்தில் நடைபெற்று வருகிறது.

**<<<<>>>>**

அறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடான பழனி தண்டாயுதபானி திருக்கோயிலில் நவராத்திரி விழாவை முன்னிட்டு வன்னிகாசுரனை வதம் செய்யும் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

**<<<<>>>>**

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியில் 136 கிலோ போதைப்பொருட்களை காவல்துறையினர் பறிமுதல் செய்தனர்.

**<<<<>>>>**

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்கவும், பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் தற்போதைய நிலை குறித்தும் அம்மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. ரஜத் சதுர்வேதி ஆய்வு செய்தார்.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் கோத்தகிரி அருகேயுள்ள கிராமத்தில் 20 அடி குழிக்குள் விழுந்த நபரை தீயணைப்புப் படையினர் பத்திரமாக மீட்டுள்ளனர்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலகக்கோப்பை மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

ஷார்ஜாவில் நடைபெறும் இப்போட்டி, இந்திய நேரப்படி இரவு 7.30 மணிக்கு தொடங்குகிறது.

<<<<>>>>

பங்களாதேஷுக்கு எதிரான 3வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா 133 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஹைதராபாதில் நேற்று நடைபெற்ற இப்போட்டியில் முதலில் பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 6 விக்கெட் இழப்புக்கு 297 ரன் எடுத்தது.

298 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய பங்களாதேஷ், 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 164 ரன் எடுத்தது.

<<<<>>>>

கஜகஸ்தானில் நடைபெற்று வரும் ஆசிய டேபிள் டென்னிஸ் சாம்பியன் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் **Ayhika Mukherjee – Sutirtha Mukherjee** இணை, ஜப்பான் இணையை இன்று எதிர்கொள்கிறது.

<<<<>>>>

ஆஸ்திரேலியாவில் நடைபெற்று வரும் சர்வதேச பேட்மிட்டன் போட்டியில் இந்தியாவின் **Tanya Hemanth** இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தில் அவர், சிங்கப்பூரின் **Yue Yann Jaslyn Hooi**-ஐ 15-21, 21-18, 21-15 என்ற செட் கணக்கில் வென்றார்.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் அவர் சீன தைபேயின் **Tung Ciou-Tong**-ஐ எதிர்கொள்கிறார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஹரிஹரன் - ரூபன் குமார் இணை இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற அரை இறுதி ஆட்டத்தில் இந்த இணை - ஜப்பான் இணையை 23-21, 21-14 என்ற செட் கணக்கில் வென்றது.

**<<<<>>>>**

மைசூருவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியின் மகளிர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ஸ்ரீவள்ளி ராஷ்மிகா – அமெரிக்காவின் **Jessie Aney**-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

**<<<<>>>>**

இந்தியா - வியட்நாம் இடையேயான நட்புணர்வு கால்பந்துப் போட்டி டிராவில் முடிவடைந்தது.

வியட்நாமில் நடைபெற்ற இப்போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தன.

**<<<<>>>>**

முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டியின் பதக்கப் பட்டியலில் சென்னை 25 தங்கம், 17 வெள்ளி, 21 வெண்கலப் பதக்கங்களுடன் முதலிடத்தில் உள்ளது.

10 தங்கம் உள்ளிட்ட 19 பதக்கங்களுடன் சேலம் இரண்டாவது இடத்திலும், 8 தங்கம் உட்பட 20 தங்கப்பதக்கங்களுன் ஈரோடு 3வது இடத்திலும் உள்ளது.

**<<<<The End>>>>**